11th August 1956] [Sri S. Swayamprakasam]

பிரச்னையைத் தீர்த்து வைக்கவேண்டுமென்ற திட எண்ணத்துடனே அரசாங்கம் முன்வருவார்களானுல் நல்ல முறையிலே இதைத் தீர்த்து வைக்கலாம் என்பது என்னுடைய எண்ணம்.

எட்டு பொருள்கள் சம்பந்தப்பட்ட வரியில் ஒருமுனை விற்பனை வரி அமுலுக்கு வரும் என்று கவர்னர் அவர்கள் சொற்பொழிவில் கூறியிருக்கிருர்கள். ஆனுல், மக்கள் உணவுப்பொருள்கள் மீது ஒருமுனை விற்பனை வரி போடவேண்டுமென்று கோரிக்கொண்டிருக்கிருர்கள். இது விஷயமாக வியாபாரிகள் அதிகமாக கஷ்டப்படுவது அதிகாரிகளின் உபத்திரவத்தினுல்தான். கடைசியில் எல்லாப் பொறுப்பும் வாங்கி உண்ணும் பொது மக்கள் தலையில்தான் விழுகிறது. உணவுப் பொருள்களின் மீது ஒருமுனை விற்பனை வரி அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்பதுதான் என்னுடைய கோரிக்கை.

ஒரே வரியில் ஹரிஜனங்கள், பிற்பட்ட மக்கள் இவர்களுடைய நலன்கள் எப்பொழுதும்போல கவனிக்கப்பட்டு வருவதாக கவர்னர் அவர்கள் கூறிவிட்டார். அவர்கள் நிலைமையை உயர்த்துவதற்கு இப்பொழுது செய்ய வேண்டிய காரியங்கள் கொஞ்சம் அதிகமாக இருக்கின்றன என்பதை அரசாங்கம் உணர்ந்ததாகத் தெரியவில்லை. ஹரிஜனங்களுக்கும் பிற்பட்ட மக்களுக்கும் ஏற்கனவே உள்ளதைவிட கொஞ்சம் அதிகமான நலன்களைச் செய்துகொடுக்க ஒரு திட்டத்தை வகுத்து அதை நிறைவேற்றிவைக்கவும் வேண்டுமென்பது என்னுடைய முழு ஆசை.

பொதுவாக எப்பொழுதும் நான் சொல்லுவது என்னவென்ருல் ஜனங்களின் பொது சுகாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதுதான். அவர்கள் உண்ணும் உணவு சத்துள்ளதாயிருக்கும்படி அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும். ஆஸ்பத்திரிகளுக்கு வரும் வியாதியஸ்தர்களில் 100-க்கு 60 பேர்களுக்கு சத்துக் குறைவான உணவை சாப்பிடுவதினுல்தான் வியாதி வருவதாகச் சொல்லப்படுகிறது. அவர்கள் உண்ணும் உணவை கட்டுப்பாடு செய்து சத்துள்ளதாகச் செய்வதற்கும், சுகாதாரமுள்ளதாகச் செய்வதற்கும் வேண்டிய ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : The House will now adjourn for lunch and meet again at 2 p.m.

The House then rose for lunch.

(After lunch—2 p.m.)

VI.—PRESENTATION OF PETITION TO THE ASSEMBLY—*cont.*

SRI K. P. GOPALAN : Sir, with your kind permission, I am presenting a petition to this Honourable House on behalf of the Corporation Labour Union, Madras, regarding their grievances in the matter of house rent, City allowance, Dearness allowance, etc.

The Member then presented the petition to the Secretary.

V.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

SRI P. RAMAMURTHI : Sir, I would like to make a personal request. I am not feeling well and it is rather difficult for me to make a speech just now. If everyone agrees, I would like to make my speech on Monday immediately after the question hour and the Hon. Leader of the House also can reply on Monday.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS